வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2322/ஆ2/2025 நாள்: 31.12.2025

பொருள்: பள்ளிக் கல்வி–வேலூர் மாவட்டம்– உடற்கல்வி– 2025–2026 ஆம் கல்வியாண்டில் மாநில அளவிலான 66வது குடியரசு தின/பாரதியார் தின குழு விளையாட்டுப் போட்டிகள்–குத்துச்சண்டை, சிலம்பம், வளையப்பந்து –நடைபெறும் இடம் தேதி போன்ற விவரங்கள் தெரிவித்தல்–சார்பு.

பார்வை:
1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.018655/எம்2/இ2/2025 நாள்: 02.07.2025.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறை நாள்: 08.07.2025.
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.012155/எம்2/இ2/2025 நாள்: .09.2025.
4. தேனி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.24/அ3/2025 நாள்: 22.12.2025.

-----

பார்வை(3)&(4)–இல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் மற்றும் தேனி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு 2025–2026–ஆம் கல்வியாண்டிற்கான மாநில அளவிலான 66வது குடியரசு தின குழு/ பாரதியார் தின குத்துச்சண்டை, சிலம்பம், வளையப்பந்து விளையாட்டுப் போட்டிகள் இணைப்பில் காணும் அட்டவணையின்படி தேனி மாவட்டத்தில் 04.01.2026 முதல் 07.01.2026 வரை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்று, மாநில அளவிலான போட்டிகளில் பங்குபெறவுள்ள மாணவ/மாணவியர்களை பார்வை(1)&(2)–இல் தெரிவிக்கப்பட்டுள்ள (SOP) நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி உரிய நேரத்தில் பாதுகாப்பான முறையில் எவ்வித புகாருக்கும் இடம் அளிக்கா வண்ணம் பங்குபெறச் செய்யுமாறும், மேலும் தேனி மாவட்டத்தில் சுற்றுலா தலங்கள் அதிகமாக உள்ளதால் மாணவ/மாணவியர்களை சுற்றுலா தலங்களுக்கு அழைத்துச் செல்வதை தவிர்க்குமாறு அணிமேலாளர்களுக்கு அறிவுறுத்திட சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர் /முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:**
1. கால அட்டவணை
2. மாணவ/மாணவியர்களின் பெயர் பட்டியல்.
3. அணிமேலாளர்களுக்கான அறிவுரைகள்.
4. நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்– SOP.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்

சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள்.
வேலூர் மாவட்டம்.

**நகல்**
1. மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்.
   (இடைநிலை/தொடக்கக் கல்வி/தனியார் பள்ளிகள்)
   தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், வேலூர் மாவட்டம்.